பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**21 02 2026** **SATURDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** இந்தியா — பிரேசில் இடையேயான வர்த்தகத்தை **20** பில்லியன் டாலர் அளவுக்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2)** புதிய தொழில்நுட்பத்தை நமது நாட்டில் நடைமுறைப்படுத்துவது பிரதமரின் லட்சியமாக உள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

**3)** கோவிட் பெருந்தொற்று காலத்தில் பணியாற்றிய **668** செவிலியர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிநியமன ஆணைகளை மாநில அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் இன்று வழங்கினார்.

**4)** தென் தமிழகத்தில் அடுத்த **24** மணிநேரத்தில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5)** ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மகளிர் டிவெண்டி - டிவெண்டி கிரிக்கெட் போட்டித் தொடரை இந்தியா கைப்பற்றியது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>

இந்தியா — பிரேசில் இடையேயான வர்த்தகத்தை அடுத்த ஐந்தாண்டுகளில் **20** பில்லியன் டாலர் அளவுக்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பிரேசில் அதிபர் திரு **Luiz Inacio Lula Da-Silva** -வுடன் ஆலோசனை மேற்கொண்ட பின் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையில் தென் அமெரிக்க நாடுகளுள் மிகப்பெரிய வர்த்தக பங்கு நாடாக பிரேசில் திகழ்வதாக பிரதமர் கூறியுள்ளார்.

இந்தியா-பிரேசில் இடையேயான வர்த்தகம் நம்பிக்கையின் அடிப்படையில் வளர்ந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பிரேசிலில் இருநாடுகளும் இணைந்து டிஜிட்டல் பொது கட்டமைப்புக்கான மையத்தை தொடங்குவது மகிழ்ச்சி அளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையே தொழில்நுட்பம், புதுமை கண்டுபிடிப்புகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பது வளர்ந்துவரும் நாடுகளுக்கு முக்கியமானது என்று பிரதமர் கூறியுள்ளார்.

இந்தியா — பிரேசில் இடையே அரிய கனிம வளத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் மூலம் இத்துறையின் மேம்பாட்டிற்கு வழிவகை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதத்திற்கு எதிராக ஒருங்கிணைந்து செயல்பட இருநாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளதாக திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையே கனிம வளம், மின்னணு தொழில்நுட்ப ஒத்துழைப்பு, சுகாதாரம், சிறு மற்றும் குறு தொழில்கள் உள்ளிட்டவற்றில் பத்து முக்கிய ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாயின.

<<<<<<<>>>>>>

அரசியல் சாசனம் தாய்மொழியில் மக்களிடம் சென்றடைய வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் அரசியல் சாசனத்தின் தமிழ் மற்றும் குஜராத்தி பதிப்புகளை வெளியிட்டு பேசிய அவர், மக்களிடையே அரசியல் சாசனம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த இது வழிவகை செய்யும் என்றார்.

தமிழ் மற்றும் குஜராத்தி மொழிகள் கலாச்சார பாரம்பரியமிக்க செம்மொழிகள் என்று கூறிய குடியரசு துணைத் தலைவர், நூற்றாண்டு கால வரலாற்றை கொண்ட இலக்கியங்கள் இம்மொழிகளில் உள்ளதாக தெரிவித்தார்.

தமிழ் மற்றும் குஜராத்தி மொழிகளில் அரசியல் சாசனம் வெளியிடப்பட்டுள்ளதன் மூலம், உரிமை, கடமை மற்றும் ஜனநாயக மாண்புகள் குறித்து அம்மாநிலங்களின் மக்கள் எளிதாக புரிந்துகொள்ள இயலும் என்று அவர் கூறினார்.

முதன்முறையாக **Boro, Dogri, Sandali** உள்ளிட்ட பிராந்திய மொழிகளிலும் அரசியல் சாசனம் வெளியிடப்பட்டுள்ளதை திரு சி பி ராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டினார்.

<<<<<<<>>>>>>>

புதிய தொழில்நுட்பத்தை நமது நாட்டில் நடைமுறைப்படுத்துவது பிரதமர் திரு நரேந்திர மோடியின் லட்சியமாக உள்ளதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதுதில்லியில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப

உச்சிமாநாடு நமது இளைஞர்களை தொழில்முனைவோராக மாற்றும் என்று தெரிவித்தார்.

**(சவுண்ட் பைட் — எல் முருகன் — 39 செகண்ட்ஸ்)**

வரும் 2047 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற தொலைநோக்கு பார்வையில் பிரதமர் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் ஒன்றாம் ஆம் தேதி மதுரையில் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணி கூட்டத்தில் உரையாற்றவுள்ளதாக டாக்டர் எல் முருகன் கூறினார்.

<<<<<<<>>>>>>

தமிழ் - இந்தோ - ஐரோப்பிய மொழிகளில் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதியின் நான்காவது தொகுதி நூலை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று சென்னையில் வெளியிட்டார்.

அப்போது பேசிய அவர், இந்தோ — ஐரோப்பிய மொழிகளான லத்தீன், கிரேக்கம், ஜெர்மன், பெர்ஷியன், சமஸ்கிருதம் உள்ளிட்ட மொழிகளை ஆய்வு செய்து, அந்த மொழிகளில் வேர்ச்சொற்களை

ஒப்பிட்டு, இந்த நூல் தொகுதிகள் வெளியிடப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

கோவிட் பெருந்தொற்று காலத்தில் பணியாற்றிய 668 செவிலியர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிநியமன ஆணைகளை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் இன்று வழங்கினார்.

சென்னை தேனாம்பேட்டையில் இந்த ஆணைகளை வழங்கியபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கோவிட் காலத்தில் தற்காலிகமாக பணியாற்றிய செவிலியர்களுக்கு படிப்படியாக பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

2014-ஆம் ஆண்டு தொடங்கி, தற்காலிக அடிப்படையில் பணியில் சேர்ந்தவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இதுவரை 5 ஆயிரத்து 825 ஒப்பந்த செவிலியர்களுக்கு நிரந்தர பணி ஆணைகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

அரசு போக்குவரத்துக் கழகத்தில் ஓய்வுபெறும் தொழிலாளர்களுக்கு பணப்பலன்களை வழங்க **2** ஆயிரத்து **446** கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரியலூர் போக்குவரத்துக்கழக பணிமனையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், பணியின்போது உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி பேசிய அவர், வரும் மார்ச் மாதம் வரை ஓய்வுபெறும் தொழிலாளர்களுக்கு இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

அரசு போக்குவரத்துக்கழகத்தில் நேரடி நியமனம் மூலம் **3** ஆயிரம் பேர் பணியமர்த்தப்பட உள்ளதாகவும் திரு சிவசங்கர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

தென் தமிழகத்தின் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களில் அடுத்த **24** மணிநேரத்தில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தென்மண்டல வானிலை ஆய்வு மைய இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்தார்.

***(Sound Byte — துரை - 47 Sec. )***

<<<<<<<>>>>>>

சென்னை ஐ ஐ டி-யில் மேலாண்மை மற்றும் தரவு அறிவியல் என்ற இளங்கலை அறிவியல் பட்டப்படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இப்படிப்பில் சேருவதற்கு வரும் மே மாதம் **31**-ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்றும், ஜூன் மாதத்தில் வகுப்புகள் தொடங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Study.iitm.ac.in** என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா அரசு கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஐந்தாயிரத்து **411** பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர் திரு காந்தி இன்று வழங்கினார்.

---------------

நாமக்கல் மாவட்டத்தில் தேர்தல் பொறுப்பு அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் திருமதி துர்காமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

--------------------

வேலூர் மாவட்டம் காட்பாடியில் ஓய்வுபெற்ற அரசு அலுவலர்கள் நலப்பிரிவு கலந்தாய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.

--------------------

திருப்பூரில் பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவாக செயல்பட்டுவந்த ஆறு பேரை காவல்துறை கைது செய்துள்ளது.

---------------------

காஞ்சிபுரம் மாவட்டம் காமாட்சியம்மன் கோவில் மாசி மாத பிரமோற்சவம் கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

<<<<<<<>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3-ஆவது மற்றும் இறுதி மகளிர் டிவென்டி - டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 17 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியது.

அடிலெய்டில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 6 விக்கெட் இழப்பிற்கு 176 ரன் எடுத்தது.

**177 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஆஸ்திரேலியா, 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 159 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.**

**மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரில், இந்தியா 2-1 என்ற ஆட்டக்கணக்கில் தொடரை கைப்பற்றியது.**

**--------------**

**புதுதில்லியில் நடைபெற்ற சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தாந்த் பான்தியா — பல்கேரியாவின் Alexander Donski இணை பட்டம் வென்றது.**

**<<<<<<<END>>>>>>>**